1995 ஏப்ரல் 26]

452—

தேங்காய் துருவலைப் பதப்படுத்தும் தொழிற்சாலை நிறுவுதல்

24879*—திரு. கா. பூ. முனுசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பர்கூர் தொகுதியில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் தேங்காய்த்துருவலைப் பதப்படுத்தும் தொழிற்சாலை நிறுவ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம் பர்கூர் தொகுதியில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் தேங்காய் துருவலைப் பதப்படுத்தும் தொழிற்சாலை நிறுவும் பிரேரணை எதுவும் இல்லை.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே தேங்காய் விளைச்சலில் தமிழகம் முன்னிலை மாநிலமாக இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தினுடைய தென் பெண்ணையாற்றின் படுகையிலும் அதே போன்று வடாற்காட்டில் ஓடிக்கொண்டிருக்கிற பாலாற்றின் படுகையிலும் அதிகப்படியான தேங்காய் விளைச்சல் இருக்கிறது. இங்கே விளைவிக்கின்ற விவசாய பெருமக்களுக்கு கட்டுப்படியான விலைநிர்ணயம் கிடைக்காத காரணத்தால் இதுபோன்ற தொழிற்சாலைகளை அமைத்தால் நல்ல விலை கிடைக்கும். எனவே அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய் உற்பத்தித் திறனில் தமிழகம் முதலிடத்திலே இருக்கிறது. ஆனால் அரசே இதுபோன்ற தொழிற்சாலை நிறுவுவதற்குத் தான் இல்லை என்று சொன்னேன். ஆனால் தொழில் முனைவோர்கள் வருவார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு அரசு ஆலோசனைகளையும் நிதியுதவியையும் தறுவதற்கும், அவர்களுக்கு சில விதிவிலக்கைத் தருவதற்கும் தயாராக இருக்கிறது. எனவே தனியார் கொண்டு வந்தால் அந்தத் தொழிற்சாலை துவங்குவதற்கு அரசு ஆவன செய்யும்.

[*1995 ஏப்ரல் 26*

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய விளைபொருட்களின் மூலமாக தொழிற்சாலைகள் அமைப்பதற்கு தொழில் முனைவோர்கள் அதிகமாக ஆர்வம் காட்டுவதில்லை. காரணம், அந்த விளைபொருட்களை ஒட்டுமொத்தமாக ஒரு இடத்திலே வாங்கமுடியாத ஒரு காரணம். அதோடுமட்டுமல்லாமல் பல பகுதிகளிலிருந்து அந்த விளைபொருட்களை சேகரிக்கின்ற காரணத்தினால் உரிய விலை நிர்ணயம் அந்தத் தொழில் முனைவோரால் செய்யமுடிவதில்லை. எனவே, அரசு கரும்புக்கு விலைநிர்ணயம் செய்வதுபோல் குறைந்தபட்சம் தேங்காய்க்கு விலை நிர்ணயம் செய்வார்கள் என்று சொன்னால், அரசு விலை நிர்ணயம் செய்கின்ற பட்சத்தில் தொழில் முனைவோர்கள் வந்து இதுபோன்ற தொழிற்சாலைகளை அமைப்பார்கள். மேலும் இந்தத் தேங்காய்த் துருவலுக்குப் பின்பு அந்த ஓட்டிலே கிடைக்கின்ற ஒருவிதமான பொடி விண்கலத்திற்கே பயன்படுத்துவதாக அறிகிறேன். எனவே அரசு தேங்காய்க்கு விலைநிர்ணயம் செய்வதோடு அந்தப் பகுதியிலே அரசு சார்பாகவே இந்தத் தொழிற்சாலை அமைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு பதப்படுத்துதல் போன்றவைகளை தமிழகத்திலே ஊக்குவிக்கப்படவேண்டுமென்பதற்காக தமிழக வேளாண் தொழில் கழகத்தில் மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பகுதி 2-திட்டத்தின்கீழ் ரூ. 1 கோடி தந்திருக்கிறார்கள். எனவே உணவு பதப்படுத்துதல் போன்ற தொழில்கள் தமிழகத்திலே வரவேண்டுமென்பதிலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். அதற்குரிய அறிவுரைகளையும் இந்தத் துறைக்கு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். எனவே மிக விரைவிலே சென்னையில் இதுபோன்ற உணவு பதப்படுத்துதல் என்பது, வேளாண் தொழிலை அடிப்படையாகக் கொண்டு செய்யக்கூடிய பல தொழிற்சாலைகளைக் கொண்டுவருவதற்கு ஒரு பயிலரங்கம் சென்னையில் நடைபெற இருக்கிறது. தமிழகத்திலேயும் பிற மாநிலங்களிலேயும் உள்ள தொழில் முனைவோர்களை எல்லாம் அழைத்து அந்தப் பயிலரங்கத்திலே கருத்துக்கள் வழங்கப்படும். இது பற்றிய திட்டங்கள் அங்கே அவர்களுக்குத் தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனைப் போல தேங்காய்

1995 ஏப்ரல் 26]

விலையை உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் அவருக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன் இந்த மாமன்றத்திலே, கொச்சியிலே உள்ள தென்னை வளர்ச்சி வாரியத்திலே நம்முடைய கோரிக்கையை வைத்திருக்கிறேன். கேரள மாநிலத்திலே இருப்பதைப்போல கொப்பரைக்கு எப்படி ஒரு அடிப்படை விலை நிர்ணயம் செய்கிறார்களோ, அதேபோன்று தமிழகத்திலும் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று நாம் கேட்டிருக்கிறோம். அவர்களும் இணக்கமான பதிலை தந்திருக்கிறார்கள் என்ற செய்தியை இப்போது தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *453*, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

453—

தலைவாசல் ஒன்றியத்தில் விதை உற்பத்தி மையம் ஏற்படுத்துதல்

45604*—திரு. கே. கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் ஒன்றியத்தில் கால்நடைத்துறையிடம் உள்ள இரண்டாயிராம் ஏக்கர் நிலத்தில் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம் மூலம் விதை உற்பத்தி மையம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் பகுதியிலே உள்ள இந்த நிலம் விவசாயிகளின் கால்நடைகளை மேய்ப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்போது